# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **ஐம்பெரும் - ஐஞ்சிறுங்காப்பியங்கள் தொடர்பான செய்திகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# ஐம்பெரும் - ஐஞ்சிறுங்காப்பியங்கள் தொடர்பான செய்திகள்

## ஐம்பெருங்காப்பியங்கள்

- அறம், பொருள், இன்பம், வீடு என நான்கையும் எடுத்துரைப்பது ஐம்பெருங்காப்பியம் ஆகும். இது தொடர் நிகழ்ச்சிகளைக் கொண்டு கதைப் போக்கில் அமைவதால் தொடர்நிலைச் செய்யுள் என அழைக்கப்படுகிறது.
- ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் என காப்பிய இலக்கணம் வகுத்துக் கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும்.
- காப்பியம் என்பது காப்பை இயம்புவது என்ற தமிழ்ச் சொல் ஆகும்.
- காவியம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபு என்றும் கூறுவர்.
- ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன் முதலில் கூறியவர் மயிலைநாதர்.
- ஐம்பெருங்காப்பியங்களின் நூற் பெயர்களை முதன் முதலில் குறிப்பிட்டவர் கந்தப்ப தேசிகர் (திருத்தணிகை உலா).
- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படும்.

## 1. சிலப்பதிகாரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | இளங்கோவடிகள் |
| பெற்றோர் | - | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோணை (சோழன் மகள்) |
| காலம் | - | கி.பி 2 ஆம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல்கள் | - | சிலப்பதிகாரம் |
| அடிகள் | - | 5001 வரிகள் |

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். இதில் மகர ஒற்று வலித்தல் விகாரமாயிற்று. சிலம்பினால் அதிகரித்த வரலாற்றைக் கூறுவதால் சிலப்பதிகாரம் என பெயர் பெற்றது.

| 3 காண்டங்கள் | 30 காதைகள் |
|---|---|
| புகார்க் காண்டம் | 10 காதைகள் |
| மதுரைக் காண்டம் | 13 காதைகள் |
| வஞ்சிக் காண்டம் | 7 காதைகள் |

- உரைகள் :
  - அரும்பதங்களுக்கு உரை கண்டவர் அரும்பத உரைகாரர்.
  - அடியார்க்கு நல்லார் நூல் முழுமைக்கும் விளக்கவுரை கண்டவர்.
  - ந.மு. வேங்கடசாமி நாட்டார் - நூல் முழுமைக்கும் தற்கால உரை கண்டவர்.

**நூலின் சிறப்பு பெயர்:**

- முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், முதற்காப்பியம், இரட்டைக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம், புரட்சிக் காப்பியம், மூவேந்தர் காப்பியம், தமிழ் தேசியக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடை செய்யுள் - சிலப்பதிகாரம்

**சிலம்பு கூறும் முத்தான மூன்று உண்மைகள்:**

- "அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
  உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
  ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

**சிறப்புகள்:**

- இளங்கோவடிகள் சேர மரபினர்
- இளங்கோவடிகளின் தமையன் சேரன் செங்குட்டுவன்
- இளையவரான இளங்கோவே நாடாழ்வார் என்ற கணியன் கூற்றினை பொய்யாக்க இவர் இளமையிலேயே துறவுபூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.
- அரசியல் வேறுபாடு கருதாத சமயவேறுபாடு அற்ற துறவி இளங்கோவடிகள்.
- ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானது சிலப்பதிகாரம்.
- தமிழின் முதல் காப்பிய நூல் சிலப்பதிகாரம்.
- பலராலும் போற்றப்படும் பைந்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம்.
- வழக்குரை காதை மதுரைக்காண்டத்தின் 10 வது காதையாகும்.
- இசை நாடகமே சிலப்பதிகார கதையின் உருவம்
- மலைவாழ் மக்கள் வேங்கை மரத்தின் கீழ் கண்ணகியின் சிலையை பார்த்தனர்.
- சீத்தலைச் சாத்தனார் கண்ணகி கோவலன் வரலாற்றை கூற அதனை இளங்கோவடிகள் இயற்றினார்
- "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது, அடிகள் நீரே அருளுக" என்று கூறியவர் சீத்தலை சாத்தனார்.
- "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று சிலப்பதிகாரத்தை பாடத்தொடங்கியவர்-இளங்கோவடிகள்.
- சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் சீத்தலைச் சாத்தனாரின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார்.
- சிலப்பதிகாரம், மணிமேகலை ஒன்றுபட்டு இருப்பது காலத்தால், கதையால், தொடர்பால், பாவகையால்
- புகார்க் காண்டம் - சோழநாடு, மதுரை காண்டம் - பாண்டிய நாடு, வஞ்சிக்காண்டம் - சேரநாடு சேர்ந்தது
- மன்னனை தலைவனாகக் கொள்ளாமல் மக்களை தலைமையாகக் கொண்டு இயற்றப்பட்ட நூல்.
- கண்ணகிக்கு கோவில் கட்டியவன் - சேரன் செங்குட்டுவன்
- கண்ணகிக்கு இமயமலையில் சிலையெடுத்த போது உடனிருந்த அரசர்கள்- இலங்கை மன்னன் கயவாகு, சோழ மன்னன் பெருநற்கிள்ளி, கனகவிசயன்.
- கண்ணகிக்கு கோயில் அமைந்துள்ள இடம் - கேரளா திருவஞ்சிக் களம்

- கண்ணகிக் கோவிலின் முதன் பெண் பூசாரி - தேவந்தி
- கண்ணகி வழிபாடே தற்போது துரோபதை, காளியம்மன் வழிபாடாக ஏற்று தீமிதி திருவிழாக்கள் நடைபெறுகின்றன
- கண்ணகி என்ற சொல்லுக்கு கண்களால் நகுபவள் என்று பொருள்

**சிலப்பதிகாரம் குறித்த சான்றோர்களின் கூற்று :**

- "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதியார் போற்றியுள்ளார்
- "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம்" என்று கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை பாடியுள்ளார்
- சிலப்பதிகாரம் என்பதை விட சிறப்பதிகாரம் என்பதே சிறந்தது என உ.வே.சா கூறுகிறார்.
- தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள் எனக் கூறியவர் - மு. வரதராசனார்.

**சிலப்பதிகார கதை:**

- காவிரிப்பூம்பட்டினத்து பெருவணிகன் மாசத்துவானின் மகன் கோவலன்
- காவிரிப்பூம்பட்டினத்து பெருவணிகன் மாநாய்கனின் மகள் கண்ணகி
- அதிராத பேச்சும், உதிராத சிரிப்பும் உடையவள் கண்ணகி
- கண்ணகி திருமகள் போன்ற அழகுடையவள்
- பத்தினி தெய்வம் கண்ணகி
- கண்ணகியின் தோழி தேவந்தி
- புகாரில் தலைக்கோலரிவை என்ற பட்டம் பெற்றவள் மாதவி
- மாதவியின் தாய் சித்ராபதி
- மாதவியின் தோழி வயந்தமாலை
- கோவலனின் நண்பன் மாடலன்
- கோவலன் ஆடலரசி மாதவிடம் சென்று தனது செல்வத்தை இழந்தான்
- மாதவி இந்திரவிழாவில் (28 நாட்கள் நடைபெறும்) கானல்வரிப் பாடலை பாடினாள்
- இந்திரவிழா குறித்து கூறும் நூல்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
- வணிகத்தின் பொருட்டு கண்ணகியும் கோவலனும் மதுரை சென்றனர். இவர்களுக்கு துணையாக சமணத்துறவி கவுந்தியடிகள் சென்றார்
- மதுரையில் மாதரி என்ற இடைக்குல மூதாட்டியிடம் மதுரையை அடுத்த புறஞ்சேரியில் அடைக்கலம் அடைந்தனர்.
- மாதரியின் மகள் ஐயை
- ஆயர்முதுமகள் மாதரி வீட்டில் தீயநிமித்தங்கள் தோன்ற ஆய்ச்சியர் குரவை நிகழ்த்தி திருமாலை வழிபட்டனர்
- வரி என்பது இசைப்பாடல் ஆகும்.
- கோவலன் கொல்லப்பட்ட செய்தியைக் கூறியவள்- ஆயர்வீட்டு முதியவள்
- காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன் எனக் கேட்டவள்-கண்ணகி

- ❖ பாண்டியனின் மனைவி பாண்டிமாதேவி கோப்பெருந்தேவி
- ❖ பாரத மன்னன் எனப்பட்டவன் பாண்டியன் நெடுஞ்செழியன்
- ❖ புறாவின் துன்பத்தை போக்கிய சோழ மன்னன் சிபி
- ❖ மகனை தேர்ச்சக்கரத்திலிட்டு கொன்றவன் மனுநீதிச் சோழன்
- ❖ கண்ணகியின் காற்சிலம்பு மாணிக்கப்பரல்களை கொண்டது
- ❖ பாண்டிமாதேவியின் காற்சிலம்பு முத்து பரல்களை கொண்டது
- ❖ கணவனை இழந்த மகளிருக்கு எவ்விதத்திலும் ஆறுதல்கூற இயலாது - கோப்பெருந்தேவியின் கூற்று
- ❖ இறைவனை நடனமாடச் செய்தவள் - பத்திரகாளி
- ❖ காட்டை இருப்பிடமாக கொண்டவள் - பத்திரகாளி
- ❖ தாருகனின் மார்பை பிளந்தவள் - துர்க்கை

**மேற்கோள்:**

**வழக்குரைக் காதையில் கண்ணகியின் கூற்று:**

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்தன்
அரும்பெரும் புதல்வனை ஆழியின் மடித்தோன்" **- சிலப்பதிகாரம்**

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும் **- சிலப்பதிகாரம்**

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி **- சிலப்பதிகாரம்**

வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகரப் புகுந்தீங் **- சிலப்பதிகாரம்**

நற்றிறம் படராக் கொற்கை வேற்தே
என்காற் சிலம்பு மணியுடை அரியே **- சிலப்பதிகாரம்**

"திங்களை போற்றுதும் திங்களை போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" **- சிலப்பதிகாரம் (கடவுள் வாழ்த்து)**

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
பாலை என்பதோர் படிமம் கொள்ளும் **- மாங்காட்டு மறையோன்**

## 2. மணிமேகலை

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | - | மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் |
| இயற்பெயர் | - | சாத்தனார் |
| ஊர் | - | சீத்தலை (திருச்சிராப்பள்ளி) |
| காலம் | - | 2 ஆம் நூற்றாண்டு |
| அடிகள் | - | 4755 அடிகள் |
| காதைகள் | - | 30 காதைகள் |
| பாவகை | - | நிலைமண்டில ஆசிரியப்பா |
| சமயம் | - | பௌத்தம் |

**சிறப்பு பெயர்கள்** - தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

**நூலின் சிறப்பு பெயர்கள் :**

| பெயர்கள் | பெயர்க் காரணங்கள் |
|---|---|
| மணிமேகலைத் துறவு | மாதவியின் மகளான மணிமேகலை இளமையிலேயே துறவு பூண்டதைக் கூறுவதால் |
| முதல் சமயக் காப்பியம் | பௌத்த சமயக் கொள்கைகளை வலுவாக எடுத்துக் கூறி வலியுறுத்துவதால் |
| அறக்காப்பியம் | எக்காலத்திற்கும் ஏற்ற அறங்களை எடுத்துக் கூறுவதால் |
| சீர்திருத்தக்காப்பியம் | பரத்தை ஒழிப்பு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பசி ஒழிப்பு, கொலை, களவு ஒழிப்பு முதலான சமுதாய சீர்திருத்தங்களைப் பேசுகின்றது. |
| புரட்சிக்காப்பியம் | பரத்தையின் மகளை அறத்தின் தலைவியாகவும் துறவியாகவும் மாற்றிக் காட்டியுள்ளதால் |
| கதைக் களஞ்சியக் காப்பியம் | கிளைக் கதைகளை மிகுதியாகக் கூறுவதால் |
| பசிப்பிணி மருத்துவக் காப்பியம் | அமுதசுரபியைக் கொண்டு அனைவரின் பசிப்பிணியையும் மணிமேகலை போக்கியதால் |
| பசுப்போற்றும் காப்பியம் | பசுவின் பெருமைகளை ஆபுத்திரன் மூலம் எடுத்துக் கூறுவதால் |

**சிறப்புகள்:**

- இந்தியாவை நாவலந்தீவு எனக் குறிப்பிடும் நூல் மணிமேகலை.
- தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் மணிமேகலை ஆகும். உலகில் முதலில் தோன்றிய பெண் துறவி மணிமேகலை.
- சீத்தலைச் சாத்தனாரும் இளங்கோவடிகளும் சமகாலத்தவர்.
- இவர் மதுரையில் கூலவாணிகம் செய்து வந்ததால், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என அழைக்கப்படுகிறார்.

- சொற்சுவை, பொருட்சுவை, இயற்கை வருணைகள் நிறைந்த நூல் மணிமேகலை
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையை இது கூறுவதினால் இந்நூல் மணிமேகலைத் துறவு எனவும் அழைக்கப்படுகிறது
- மணிமேகலை சமுதாய சீர்திருத்தக் காப்பியம் என்றும் வழங்கப்படுகிறது.
- இந்நூல் பௌத்த மத சார்புடையது
- பாதத்தில் சகஸ்ர (அ) சக்கர ரேகை (1000) அமையப்பெற்றவர் - புத்தர்.
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை.
- மணிமேகலையை விரும்பியவன் உதயகுமரன்.
- மணிமேகலையின் தோழி சுதமதி.
- மணிமேகலையை, மணிமேகலா தெய்வம் மணிபல்லவத் தீவிற்கு தூக்கிச் சென்று மூன்று வரங்களை அளித்தது. அங்கு அவள் பாதபீடிகையை வணங்கினாள்.
- தீவதிலகையின் உதவியால் அமுதசுரபியைப் பெற்றுப் புகார் நகரை அடைந்தவள்- மணிமேகலை
- அறவணவடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன் முதலில் அமுதசுரபியில் பிச்சை பெற்றவள்- மணிமேகலை
- அமுதசுரபி முற்பிறவியில் ஆபுத்திரனிடம் இருந்தது
- பேய் பெண்ணான காயசண்டிகையை அழகான பெண்ணாக மாற்றியவள் மணிமேகலை
- ஆபூத்திரன் நாடு அடைந்த காதை 24 காதை ஆகும்
- உலகின் 6 வகை உயிர்கள் - மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குகள், பேய்
- உடலில் தோன்றும் தீவினை - கொலை, களவு, காமம்
- சொல்லில் தோன்றும் தீவினை - பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்ற சொல்
- மணிமேகலையில் கூறப்படும் பத்துகுற்றங்கள் - கொலை, களவு, காமம், பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்றசொல், பேரவா, கடுஞ்சினம், தெளிவில்லா அறிவு
- சமயபூசலுக்கு வித்திட்ட தமிழின் இரண்டாம் காப்பிய நூல் மணிமேகலை

**மேற்கோள்:**

“நல்வினை யென்பது யாதென வினவின்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்” **- மணிமேகலை**

"அறம் எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகே மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்” **- மணிமேகலை**

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா
புத்தேள் உலப் புதல்வரும் தாரார்
மிக்க அறவே விழுத்துணை ஆவது” **- மணிமேகலை**

வினையின் வந்தது வினைக்கு விளைவாவது
உண்டிக் கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே - **மணிமேகலை**

தேவியும் ஆயமும் சித்ராபதியும்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய் - **மணிமேகலை**

## 3. சீவகசிந்தாமணி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | திருத்தக்க தேவர் |
| காலம் | - | ஒன்பதாம் நூற்றாண்டு |
| சமயம் | - | சோழநாட்டை சேர்ந்த சமணர் |
| பாவகை | - | விருத்தப்பா |
| பாடல்கள் | - | 13 இலம்பகம், 3145 பாடல்களைக் கொண்டது. |
| இயற்றிய நூல்கள் | - | சீவகசிந்தாமணி, நரி விருத்தம் |

- தமிழ் மொழியின் கண் விளங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணியும் ஒன்றாகும். சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்று பொருள்.

**திருத்தக்க தேவரின் சிறப்புப் பெயர்கள்:**

திருத்தகு முனிவர், திருத்தகு மாமுனிவர், திருத்தக்க மகாமுனிகள், தமிழ் கவிஞருள் அரசன்.

**நூலின் பெயர் காரணம் :-**

| | |
|---|---|
| **மணநூல்** | 13 இலம்பகங்களும், 8 மனைவிகளைப் பற்றிக் கூறுவதால் |
| **சிந்தாமணி** | நினைத்ததை தரும் ஆற்றல்மிக்க சிந்தாமணிக்கல் அதைப் போன்று இலக்கிய வளம் நிறைந்தது. |
| **காம நூல்** | காமச்சுவை மிகுதியாக கூறப்பட்டுள்ளதால் |
| **முக்தி நூல்** | இளமை நிலையாமை, இன்ப நிலையாமை, செல்வ நிலையாமை பற்றிக் கூறுவதால் |

**நூலின் சிறப்புகள்:**

- நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகம்
- தமிழன்னைக்கு அணி செய்தவர் திருத்தக்க தேவர்
- குன்றுதல் இல்லாத அழகிய தமிழ்நடை உடையதாலும் தமிழ்மாந்தர் தம் நெஞ்சில் வைத்து போற்றத்தக்கதாலும் சிந்தாமணி என்று பெயர்பெற்றது
- சீவகசிந்தாமணிக்கு நிகரான கவிதை - நீலகேசி

- சிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் கொண்டது
- விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ் காப்பியம் இது
- இந்நூலுக்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்
- சீவகனின் வரலாற்றை கூறும் நூல் இது
- சீவகனின் தாய் விசயை
- சீவகன் பிறந்தபொழுது அவன் தாய் விசயை சிந்தாமணியே என்று அழைத்ததால் சீவக சிந்தாமணி என்று பெயர்பெற்றது
- சீவகன் தும்மும் பொழுது கேட்ட ஒலி சீவ என்பதால் சீவகசிந்தாமணி என்று பெயர்பெற்றது
- சீவகன் 8 பெண்களை மணந்து பின் சமண துறவியாக மாறுவதை பற்றி இந்நூல் கூறுகின்றது
- சீவகசிந்தாமணியின் வேறு பெயர்கள் மண நூல், முக்தி நூல், முடி நூல், மோச்ச நூல்
- காந்தர்வதத்தை இலம்பகம் இடம்பெற்ற நூல் சீவகசிந்தாமணி
- தமிழ் கவிஞர்களின் அரசன் என திருத்தக்க தேவரை புகழ்ந்தவர் ஜி.யு. போப்
- ஜி.யு. போப் சீவகசிந்தாமணியை இலியட், ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்.
- சிந்தாமணியில் ஓர்அகப்பை முகந்து கொண்டேன் என்று கூறியவர் - கம்பர்
- சரவண பெலகொலாக் கல்வெட்டுகளில் திருத்தக்க தேவர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**<u>காந்தருவதத்தையார் இலம்பகம்</u>**

- வெள்ளி மலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் கலுழவேகனின் மகள் காந்தருவதத்தை
- செவ்வாய் என்றும் சிறப்பிக்கப்படுபவள் - காந்தர்வதத்தை
- காந்தவருவதத்தையை சீதத்தன் என்ற வணிகன்பால் ஒப்படைத்து வீணை யாழ் போரிலே தம் மகளை வெல்பருக்கு மணம் செய்து கொடுக்க வேண்டியவன் - கலுழவேகன்
- சுடுகாட்டில் பிறந்தவன் சீவகன்
- சீவகனை எடுத்து வளர்த்தவர் கந்துகடன்
- சீவகனின் நண்பன் (அ) தம்பி - நகுலன்
- சீவகனின் தாய்மாமன் கட்டியங்காரன்
- காந்தருவதத்தையின் தோழி - வீணாதிபதி
- தத்தை தன் தோழி வீணாதிபதியுடன் வந்த இடம் இராசமாபுரம்
- அரசர்களை யாழ்போருக்கு அழைத்தவர் காந்தர்வதத்தையின் தோழி வீணாபதி
- சீவகனின் யாழில் இருந்தது தலைமயிர்
- சீவகனுக்கு மாலை சூட்டியவள் காந்தர்வதத்தை
- சீவகன் யாழ்போரில் காந்தருவதத்தையை வென்று மணம் புரிந்தான்

**மேற்கோள் :-**

- "சிலைத்தொழிற் சிறு நுதற் தெய்வப் பாவைபோற்
  கலைத்தொழிற் படவெழீஇப் பாடி னாள்கனீந் - **சீவகசிந்தாமணி**

- "இருநில மடந்தை யீன்ற திருவீசும் பென்னும் கைத்தாய்" - **சீவகசிந்தாமணி**

- "வீழ்ந்து வெண்மலை தவமும் விண்ணுறு பெருவரை பெருபாம்பு
  ஊழ்ந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி
  **- திருத்தக்க தேவர் (சீவகசிந்தாமணி)**

## 4. வளையாபதி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | பெயர் தெரியவில்லை |
| சமயம் | - | சமணம் |
| காலம் | - | கி.பி. 9 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 72 பாடல்கள் |
| பாவகை | - | விருத்தப்பா |
| மூல நூல் | - | வைசீக புராணம் |

- முழுமையாக கிடைக்காத காப்பியங்களுள் வளையாபதியும் ஒன்று
- நவகோடி நாராயணன் என்னும் வணிகன் வேறு இனப் பெண்ணை மணந்து பின் மனைவியை பிரிந்து அவன் வெளியிடம் செல்கின்றான்
- அவனுக்கு பிறந்த ஆண்மகன் பின் தந்தையைத் தாயோடு சேர்க்கிறான்
- இந்நூலில் மக்கட் செல்வத்தின் பெருமை கூறப்படுகிறது.
- புறத்திரட்டு, யாப்பெருங்கல, விருத்தியுரை, சிலப்பதிகார உரை, தொல்காப்பிய உரை ஆகியவற்றிலிருந்தே வளையாபதி திரட்டி தொகுக்கப்பட்டுள்ளன.
- தக்கையாக்க பரணியின் உரையாசிரியர் ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.
- நான்கடி விருத்தப்பாக்களோடு ஆறடி விருத்தப்பாக்களும் காணப்படுகின்றன.

## 5. குண்டலகேசி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | நாதகுத்தனார் |
| காலம் | - | 8 ஆம் நூற்றாண்டு |
| பாவகை | - | விருத்தப்பா |
| சமயம் | - | பௌத்த காப்பியம் |
| பெயர்க் காரணம் | - | துறவியானபோது களைந்த கூந்தல் மீண்டும் வளர்ந்து சுருளாக தொங்கியதால் |

- ❖ குண்டலகேசி என்றால் சுருண்ட முடியுடையவள் என்று பொருள்
- ❖ குண்டலகேசியின் பெயர் பத்தரை, இவளின் கணவன் பெயர் காளன்
- ❖ இதற்கு குண்டலகேச விருத்தம், அகலகவி என்ற வேறுபெயர்களும் உண்டு
- ❖ 25 பாடல்களே கிடைத்துள்ளன.
- ❖ குண்டலகேசி சாரிபுத்தரிடம் தோற்றுப் புத்த சமயத்தை தழுவினார்.
- ❖ காளன் என்ற கள்வனை மணம்புரிய பத்திரை என்ற வணிக குலப்பெண் விரும்புகிறாள். திருமணத்திற்குப் பின் பத்திரை சினம் கொண்டிருந்த வேளையில் காளனை "கள்வன் தானே" என்று கூறி விடுகிறாள். பத்திரையை கொல்ல மலையுச்சிக்கு அழைத்துச் செல்கின்றான். அவனது சூழ்ச்சியை அறிந்து கொண்ட பத்திரை "தற்கொல்லியை முற்கொல்" என்று தனது கணவரை கொலை செய்வாள். பின்னர் அவள் தனது மயிரை நீக்கி புத்த துறவியாகிறாள்.

**மேற்கோள்:-**

- பாளையாம் தன்மை செத்தும்
  பாலனாம் தன்மை செத்தும்
  காளையாம் தன்மை செத்தும்
  காமுறும் இளமை செத்தும்
  மீளும் இவ்வியல்பும் இன்னே
  மேல் வரும் மூப்புமாகி
  நாளும் நாம்சாகின் றாமால்;
  நமக்குநாம் அழாதது என்னோ?

## ஐஞ்சிறுங்காப்பியங்கள்

- ❖ அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருளை உணர்த்தும் வகையில் வருவது பெருங்காப்பியம் ஆகும். இவற்றில் ஒன்றோ சிலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும் என்று தண்டியலங்காரம் இலக்கணம் வகுத்துக் கூறுகிறது.

| காப்பியங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| 1. நீலகேசி | பெயர் தெரியவில்லை |
| 2. சூளாமணி | தோலாமொழித் தேவர் |
| 3. யசோதர காவியம் | வெண்ணாவலூர் உடையார் |
| 4. உதயண குமார காவியம் | பெயர் தெரியவில்லை |
| 5. நாககுமார காவியம் | பெயர் தெரியவில்லை |

- ❖ ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்துமே சமணகாப்பியம் ஆகும்

## 1. நீலகேசி

| | |
|---|---|
| ஆசிரியர் | - பெயர் தெரியவில்லை |
| பாடல்கள் | - 894 பாடல்கள், 10 சருக்கங்கள் |
| பாவகை | - விருத்தப்பா |
| சமயம் | - சமணம் |
| பெயர்க் காரணம் | - நீலம் (கருமை), கேசம் (கூந்தல்), கரிய கூந்தலை உடையவள் |
| வேறு பெயர்கள் | - நீலகேசி தெருட்டு, நீலகேசி திரட்டு |
| காப்பியத் தலைவி | - நீலி |
| அருகசமய பெண்துறவி | - நீலகேசி |

- அருகதேவனின் திருப்பெயர்களின் எண்ணிக்கை - 1008
- குண்டகேசி என்ற நூலுக்கு எதிராக பாடப்பட்ட நூல்
- காமலேகை என்னும் இளவரசி உருவில் வந்தவள் - பழையனூர் நீலி என்னும் பேய்
- நீலி பேய் உருவத்தை நீக்கியவர் -முனிச் சந்திர முனிவர்

## 2. சூளாமணி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | தோலாமொழித் தேவர் (அ) வருத்தமான தேவன் |
| பாடல்கள் | - | 2330 பாடல்கள், 12 சருக்கங்கள் |
| பாவகை | - | விருத்தப்பா |
| சமயம் | - | சமணம் |
| பெயர்க் காரணம் | - | சூளாமணியைப் போல் மிக்க ஒளியினையும் சிறப்பினையும் உடையதால் |
| வேறு பெயர்கள் | - | சூடாமணி |

- இந்நூலின் மூலக் கதை ஸ்ரீபுராணம் எனப்படும் ஆறு கத மகாபுராணத்தை தழுவியது.
- இந்நூலைப் பற்றிய செய்தி சரவண பெலகொலாக் கல்வெட்டில் காணப்படுகிறது.
- விருத்தப்பா கையால்வதில் தோலாமொழித் தேவர் திருத்தக்க தேவரையே மிஞ்சிவிட்டார் - மு.வ
- சிந்தாமணியைவிட செப்பமான நடையை உடையது சூளாமணி -கி.வ. ஜெகநாதன்
- சிந்தாமணியிலும் கூட இத்தகைய ஓட்டமும் இனிமையும் சுவையும் இல்லை - தொ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

## 3. யசோதர காவியம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | வெண்ணாவலூர் உடையார் வேள் |
| பாடல்கள் | - | 320 பாடல்கள், 5 சருக்கங்கள் |
| பாவகை | - | விருத்தப்பா |
| சமயம் | - | சமணம் |
| மூல நூல் | - | உத்திர புராணம் (குணபத்திரர்) |

❖ உதய நாட்டு மன்னன் மாரிதத்தன் அபயரிஷி மற்றும் அபயமதி ஆகிய முனிவர்களை உயிர்பலி கொடுக்க முயற்சித்து உயிர்கொலையின் தீமையை உணர்ந்து விடுவிக்கிறான் எனவே "உயிர்கொலை தீது" என உணர்த்தும் நூல்.

**நூலின் சிறப்புகள்:-**

❖ புட்பதந்தர் எழுதிய யசோதர சரிதம் என்றும் நூலைத் தழுவி யசோதர காவியம் இயற்றப்பட்டது.
❖ உயிர்க்கொலை தீது, சிற்றின்பத்தின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை, இசை காமத்தைத் தூண்டும் என்னம் கருத்துக்கள் யசோதர காவியத்தில் வற்புறுத்தப்படுகின்றன.

## 4. உதயகுமார காவியம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கந்தியார் என்னும் சமணத் துறவி |
| பாடல்கள் | - | 369 பாடல்கள், 6 காண்டம் |
| பாவகை | - | விருத்தப்பா |
| சமயம் | - | சமணம் |
| மூல நூல் | - | பெருங்கதை |

❖ உதயனனுக்கு விச்சை வீரன், பலகலை வல்லவன் என்ற வேறு பெயரும் உண்டு.
❖ உதயனனுக்கு வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்னும் நான்கு மனைவிகள்

| | |
|---|---|
| 1. உஞ்சைக் காண்டம் | 2. இலாவண காண்டம் |
| 3. மகத காண்டம் | 4. வத்தவ காண்டம் |
| 5. நரவாகன காண்டம் | 6. துறவுக் காண்டம். |

## 5. பெருங்கதை

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கொங்குவேள் |
| பாடல்கள் | - | 16,230 பாடல் வரிகள் |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| சமயம் | - | சமணம் |
| நூலின் வேறு பெயர் | - | கொங்குவேள் மாக்கதை, உதயணன் கதை |

❖ உதயணன் வரலாற்றை தமிழில் கூறிய முதல் நூல் சமண காப்பியம். இதற்கு கொங்குவேள் மாக்கதை என்ற பெயரும் உண்டு.
❖ குணாட்டியர் என்பவரால் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட பிரகத்கதா என்னும் இலக்கியத்தைத் தழுவி உருவாக்கப்பட்டதே பெருங்கதை.
❖ கௌசாம்பி நாட்டு அரசனின் மகனான உதயணன் என்பவனின் கதையே பெருங்கதை ஆகும்.

## 6. நாககுமார காவியம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | பெயர் தெரியவில்லை |
| பாடல்கள் | - | 170 பாடல்கள், 5 சருக்கங்கள் |
| பாவகை | - | விருத்தப்பா |
| சமயம் | - | சமணம் |
| பெயர்க் காரணம் | - | நாககுமாரன் (அ) பிரதாபந்தன் பற்றிய செய்திகளைக் கூறுவதால் |
| நூலின் வேறு பெயர் | - | நாக பஞ்சமி கதை |

- ❖ நாகபஞ்சமி நோன்பின் சிறப்பை கூறும் நூல்.
- ❖ நூல் முழுமையும் மரணத்தையும், போகத்தையும் பற்றிக் கூறும் நூல்.